செ.வெ.எண்.13 நாள்.08.01.2018

## காஞ்சிபுரம் மாவட்டம்

## மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து பொதுமக்கள் அறியும் வகையில் விழிப்புணர்வு கலைநிகழ்ச்சியை மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.நூர்முகமது துவக்கி வைத்தார்.

******************

காஞ்சிபுரம் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் மாற்றுத்திறனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து அறியவும், அதற்கு விண்ணப்பிக்க www.kanchi.nic.in /ddra எனும் இணையதளத்தில் விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மாற்றுத்திறனாளிகளுக்காக செயல்படும் சிறப்புப்பள்ளிகள் குறித்தும், அரசாணைகள் குறித்தும், இணையதளம் மூலம் அறிய முடியும். இதுகுறித்து பொதுமக்களுக்கும், மாற்றுத்திறனாளிகளுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் கரகாட்டம், தப்பாட்டத்துடன் கூடிய கலைநிகழ்ச்சிகள் பல்வேறு ஊராட்சிகளில் நடத்த திட்டமிடப்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் கலைநிகழ்ச்சிகள் மூலம் பொதுமக்களை திரட்டி நலத்திட்ட விவரங்கள் குறித்து துண்டு பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. இதனை மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.நூர்முகமது துவக்கி வைத்தார். மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.ஸ்ரீநாத் உடனிருந்தார்.

செய்தி வெளியீடு,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.